அதனால் சுமார் 1கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதையுங்கருத்திற் கொண்டு, அந்த முறையை மாற்றியமைக்கும் வகையில் பேருந்து புறப்படும் இடத்தில் மட்டும் புறப்படும் வரை காலியாக வைத்தி ருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் இடையிலே கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதைக்கூட மாற்றி, வேறு வழிகளிலே ஏதாவது செய்யலாமா என்று ஆலோசனை செய்து வருகிறோம். விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும்.

ஒய்யாலிக்குப்பம் கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க சுவர் எழுப்பும் திட்டம்.

* வினா எண் 787—திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டத்தில் ஒய்யாலிகுப்பம் கிராமமும் 72 மீனவர் கொட்டகைகளும் கடல் அரிப்பால் அழிக்கப்படு வதைத் தடுக்கும் நோக்கத்துடன் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் எழுப்பும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு ஆண்டு காலமாக தொடர்ந்து கடல் அரிப்பால் ஏறக்குறைய 72 மீனவர்களின் குடிசைகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து அவர்களைக் காப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை கடலில் ஏற்படும் உயரமான அலைகளின் மூலம் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதுவரை, இக் கடற் பகுதிகளில் 500, மீட்டர் தூரத்திற்குள் மூன்று வரிசைகளாக இருந்த 65 குடிசை களும் மற்றும் 100-க்கு மேற்பட்ட தென்னை மரங்களும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பூண்டியிலுள்ள நீரியல் மற்றும் நிலயியல் ஆய்வகம் கடல் அரிப்புத் தடுப்பு முறைகள் பற்றி ஆய்வு செய்து வருகிறது அந்த நிலைய இயக்குநருடன் கலந்து பரிசீலனை செய்த பிறகு அப்பரிசீலனையின் முடிவின் அடிப்படையில் தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 23]

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடலோரப் பகுதியிலிருந்து ஒரு ஃபர்லாங் தூரத்தில் மேடான ஒரு இடம் குடியிருப்புக்கு ஏற்றதாக இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அவர்களைக் குடியமர்த்துவதற்குரிய யோசனை அரசிடத்திலே இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் அரசுக்கு இதுவரை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஏதோ பூண்டியிலுள்ள ஒரு ஆய்வகம் இதுபற்றி ஆய்வு செய்து வருவதாகச் சொல்லி இருக்கிறார். 500 மைல் அளவுக்கு இருக்கின்ற தூரங்களில் கடல் அரிப்பு ஏற்படுகின்றது என்று சொல்லி இருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழக அரசு கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் சிலயிடங்கள் கத்திவாக்கம் மற்றும் இங்குள்ள திருவொற்றியூர் போன்ற இடங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். திருவான்மியூர், ஒய்யாலிகுப்பம் போன்ற இடங்கள் பெருவாரியாகக் கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்ற இடம். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் இருப்பவர்களுக்கு மாற்று இடம் தந்து நிவாரணம் தந்துவிட்டு அவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா ? ஏராளமான வீடுகள் அவர்களுக்காகக் கட்டுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படியானால் ஒய்யாலிகுப்பம் பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கடல் அரிப்பு என்பது ஒய்யாலிக் குப்பம் பகுதியில் எப்போதும் இல்லை. குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே உயர்ந்து வரும் அலைகளால் பாதிக்கப்படுகின்ற நிலையில்தான் அங்கு பாதிப்பு ஏற்படுகின்றது. அந்த வகையில் இதுவரை 65 குடிசைகளும், நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எப்படி இருந்தாலும் அங்கே பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் காதி வாரியத்தின் மூலம் செயல்பட்டுவரும் காகித ஆலைகள்.

* வினா எண் 788—திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—